ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2072/25 - 2018 මැයි මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.24

*2072/ 25 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### *2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 ஆ (2) என்னும் பிரிவின் கீழ், நோர்வூட் பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்*

*கேட்டு விலகியமை காரணமாக நோர்வூட் பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவிவகித்த பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66 ஆ (2) ஆம் பிரிவின் கீழ், திரு. காளிமுத்து சிவசாமி என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் கிளை) என்ற அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30 நாட் காலக்கெடுவுக்குள் துணைத் தவிசாளர் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவரும் நோர்வூட் பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பபட்டுள்ளவருமான துணைத் தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் , அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. தங்கராஜ் கிசோகுமார் என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*நோர்வூட் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் புலஸ்தி பதிரண ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. தங்கராஜ் கிசோகுமார் என்பவர் நோர்வூட் பிரதேச சபையின் துணைத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*புலஸ்தி பதிரண,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*நோர்வூட் பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*நுவரெலியா,*
*2018, மே 23.*

*6 - 443*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*